முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1000

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.06.2022, சனிக்கிழமை

1. அறமாக வாழுகின்ற ஞானியே
ஆற்றலாக உலகை இயக்குகின்ற
வரம்பெற்று வந்த மாதவசியே
வள்ளலே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 11 நாள், 25.06.2022 சனிக்கிழமை)
ஆற்றல்மிக்க அரங்கன் தர்மமே
மாற்றம் தனை கலியினில் செய்யக்கூடும்
3. கூடுமே அரங்கன் அருள்தீட்சை
குவலயத்தாரை ஞானியர் ஆக்கி
நாடெங்கிலும் ஞானவான்கள் ஆட்சி
ஞான ஆட்சியாக நடத்த அருள்புரியும்
4. அருள்மிக்க அரங்கனே ஞானத்தலைவன்
ஆற்றல்மிக்க தவசியே கலியின் மீட்பாளன்
பொருள்பட உலகோர் உணர்ந்து தெளிந்து
புண்ணியவழிக்கு வந்து அரங்கன் வழி இணைந்து
5. இணைந்து அற்புதம் நடத்த
இந்த உலகம் சடுதி ஞான ஆட்சிக்காலம் பெறும்
காலமதை வெல்லும் மகா சக்தியாக
கருணைகொண்டு தர்மத்தை வளர்த்துவர
6. ஞானவான் தருகின்ற ஞானமே உலகை தேற்றும் மாற்றும்
நம்பிக்கை வைத்து உலகோர் வர
ஞானிகளாகி அரங்கன் வழி
நிலை பெற நேரும்
7. நேர்மைகொண்டு அரங்கனுள் நித்தம்நித்தம்
உலக ஞானியர் படை வலம் வந்து பெருமை சேர்த்து வர
வையகத்தார் வந்து செல்லவே மாற்றம்
வலியக் கிட்டி உலகோர்க்கு ஞானவாழ்வு சித்திக்கும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–